

நெல்லை மாவட்டம் நெல்லை டவுன் திருநெல்வேலி மாநகராட்சி வர்த்தகம் மையத்தில் (10.02.2026 ) அன்று நடைபெற்ற 9 வது பொருநை நெல்லை புத்தகத் திருவிழா துவக்க விழா நிகழ்வில் சட்டப்பேரவை தலைவர் மு.அப்பாவு பங்கேற்று மாவட்ட ஆட்சியர் மரு.இரா.சுகுமார் தலைமையில் நெல்லை மத்திய மாவட்டப் பொறுப்பாளர் மு.அப்துல் வஹாப் எம்.எல்.ஏ.மேயர் கோ.ராமகிருஷ்ணன், சாகித்திய அகாடமி விருதாளர் வண்ணதாசன் ஆகியோர் முன்னிலையில் துவக்கி வைத்து புத்தக அரங்குகளை பார்வையிட்டார்.உடன் மாநகராட்சி ஆணையாளர் மரு.மோனிகா ராணா, துணை மேயர் ராஜ்,மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழக துணை வேந்தர் முனைவர் சந்திரசேகர்,மாவட்ட வருவாய் அலுவலர் துரை உட்பட பலர் உள்ளனர்.

# தமிழ்நாட்டில் ரயில் நிலையங்களை எப்போது மறுசீரமைக்கப் போகின்றீர்கள்?

## மக்களவையில் – தயாநிதி மாறன் கேள்வி!



புதுடெல்லி, பிப்.13-

அம்ரித் பாரத் திட்டத்தின்கீழ் தமிழ்நாட்டில் உள்ள ரயில் நிலையங்களை மறுசீரமைப்பதற்கு தெற்கு ரயில்வே மேற்கொண்டு வரும் பணிகளின் தற்போதைய நிலை என்ன என்றும் ரயில் பயணிகளுக்கு ஏற்படும் சிரமங்களை சரி செய்ய ஒன்றிய அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன என்பது உள்ளிட்ட பல கேள்விகளை மக்களவையில், ரயில்வே துறை அமைச்சர் அஸ்வினி வைஷ்ணவுக்கு திமுக நாடாளுமன்றக் குழு துணைத் தலைவரும் மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினருமான தயாநிதி மாறன் எழுப்பியுள்ளார்.

அதன் விவரங்கள் பின்வருமாறு:-

அம்ரித் பாரத் ரயில் நிலையத் திட்டம் தொடங்கப்பட்டதிலிருந்து, நாடு முழுவதும் மறு சீரமைப்புப் பணிகளுக்காக கண்டறியப்பட்ட மொத்த ரயில் நிலையங்களின் எண்ணிக்கை எவ்வளவு? ஜனவரி 1, 2026 அன்றைய நிலவரப்படி, பணிகள் நிறைவடைந்த ரயில் நிலையங்களின் மொத்த எண்ணிக்கை எவ்வளவு?

மேலும் இந்தத் திட்டத்தின்கீழ் தமிழ்நாட்டில் உள்ள ரயில் நிலையங்களை மறுசீரமைக்கும் பணிகளை தெற்கு ரயில்வே மேற்கொண்டு வருகிறதா? அப்படியானால், எத்தனை ரயில் நிலையங்களில் மறுசீரமைப்புப் பணிகள் நடந்து வருகிறது? அப்பணிகளின் தற்போதைய நிலை என்ன? சென்னை பூங்கா, கிண்டி, சென்னை கடற்கரை மற்றும் கூடுவாஞ்சேரி ஆகிய ரயில் நிலையங்களில் மறுசீரமைப்புப் பணிகள் நிறைவடையும் தருவாயில் உள்ளதா? அவ்வாறு இருந்தால், அதன் விவரங்கள் மற்றும் மீதமுள்ள ரயில் நிலையங்களில் மறுசீரமைப்புப் பணிகள் எப்போது நிறைவடையும்?

இத்திட்டத்தின்கீழ் பயணிகளுக்கான மின்தூக்கிகள் (Lifts), நகரும் படிக்கட்டுகள் (Escalators), கழிப்பறைகள், மேம்படுத்தப்பட்ட நடைமேடைகள், பாதுகாப்பு நடவடிக்கைகள், மாற்றுத்திறனாளிகள் மற்றும் முதியோருக்கான வசதிகள் மேலும் அவர்கள் சென்று சேர வேண்டிய பகுதிகளுக்கான இணைப்பு வசதி உள்ளிட்ட வசதிகள் குறித்த விவரங்கள் யாவை?

இந்தத் திட்டத்தின்கீழ் மாநிலம் மற்றும் மண்டல வாரியாக ஒதுக்கப்பட்ட, விடுவிக்கப்பட்ட மற்றும் பயன்படுத்தப்பட்ட மொத்த நிதியின் விவரங்கள் என்ன?

மறுசீரமைப்பு தொடர்பான கட்டுமானப் பணிகளின்போது வாகன நிறுத்தும் இடத்தின் பற்றாக்குறை மற்றும் பயணிகளுக்கு ஏற்படும் சிரமங்கள் போன்ற பிரச்சினைகள் குறித்து தெரிவிக்கப்பட்டுள்ளதா? அப்படியானால், அவற்றை சரி செய்வதற்கும், திட்டங்களை சரியான நேரத்தில் முடிப்பதை உறுதி செய்வதற்கும் ஒன்றிய அரசு எடுத்த நடவடிக்கைகளின் விவரங்கள் என்ன?

இவ்வாறு அவர் கேள்வி எழுப்பினார்.

### தென்காசி தொகுதியில் பல முக்கியமான

# ரயில் சேவை - உட்கட்டமைப்பு தேவைகளை பூர்த்தி செய்திடுவீர்!

## ராணி ஸ்ரீ குமார் எம்.பி. ஒன்றிய ரயில்வே அமைச்சருக்கு கோரிக்கை!



புதுடெல்லி, பிப்13-

தென்காசி நாடாளுமன்ற உறுப்பினர் மருத்துவர் ராணி ஸ்ரீகுமார், ஒன்றிய இரயில்வே அமைச்சர் அஸ்வின் வைஷ்ணவிடம் நேரில் கொடுத்துள்ள கோரிக்கை மனுவில் கூறி இருப்பதாவது.-

எனது தென்காசி தொகுதியான பல முக்கியமான ரயில் சேவை மற்றும் உட்கட்டமைப்பு தொடர்பான தேவைகளை உங்கள் கவனத்திற்கு கொண்டு வருவதற்காக இதை எழுதுகிறேன்.இது இணைப்பு மற்றும் பயணிகள் வசதியை கணிசமாக மேம்படுத்தும் பின்வரும் கோரிக்கைகள் பொதுமக்களால் எழுதப்பட்டுள்ளன.

மேலும் அவை அவசரமாக பரிசீலிக்கப்பட வேண்டும்.

செங்கோட்டை மற்றும் தாம்பரம் இடையே சிலம்பு சூப்பர் பாஸ்ட் எக்ஸ்பிரஸ் (ரயில் எண் 20681/20682) க்கு தினசரி சேவையை அறிமுகப்படுத்துதல்.ரயில் எண் 16721 மதுரை இன்டர்சிட்டி எக்ஸ்பிரஸ் (கோயம்புத்தூர் முதல் மதுரை வரை) செங்கோட்டை வரை நீட்டித்தல். ரயில் எண் 16101/16102 சென்னை எழும்பூர் கொல்லம் எக்ஸ்பிரஸ்க்கு பம்பா கோவில் ஷாண்டியில் நிறுத்த இடம் வழங்குதல்.

செங்கோட்டையில் ரேக் பராமரிப்புக்காக ஒரு புதிய பொருத்துதல் பாதையை அமைத்தல்,இது செயல்பாட்டு திறனை அதிகரிக்கும்.சென்னை எழும்பூர் மற்றும் செங்கோட்டை இடையே ஒரு புதிய வந்தே பாரத் ரயில் சேவையை அறிமுகப்படுத்து தல்.

ரயில் எண் 12661 (பொதிகை சூப்பர் பாஸ்ட் எக்ஸ்பிரஸ்)சென்னையிலிருந்து புறப்படும் நேரத்தை இரவு 8 10 மணி முதல் இரவு 7:35 மணி வரை 35 நிமிடங்கள் அதிகரிக்க வேண்டும் என்ற அமைச்சகத்தின் முடிவை மறு பரிசீலனை செய்ய வேண்டியது அவசியம் குறித்து உங்கள் கவனத்திற்கு கொண்டு வந்துள்ளேன்.இந்த விஷயம் பயணிகளிடையே குறிப்பிடத்தக்க கவலைகளை எழுப்பியுள்ளது.

மேலும் உடனடியாக பரிசீலிக்கப்பட வேண்டும் போன்றவை உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி மனுவில் கூறியுள்ளார்.




முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்களின் ஆணைக்கிணங்க தென்காசி வடக்கு மாவட்டம் சங்கரன்கோவில் ஸ்ரீ சீதாலட்சுமி திருமண மஹாலில் ”தமிழ்நாடு தலைகுனியாதுகருத்தரங்க கூட்டம் தென்காசி வடக்கு மாவட்டச் செயலாளர் ஈ.ராஜா எம்.எல்.ஏ.தலைமையில் சங்கரன்கோவில் தொகுதி பார்வையாளர் பி.கே.ராமஜெயம் முன்னிலையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் கழக விவசாய அணி செயலாளர், தமிழக அரசின் டெல்லி சிறப்புப் பிரதிநிதி ஏ.கே.எஸ்.விஜயன் பங்கேற்று உரையாற்றினார்.



தேனி தெற்கு மாவட்டம் கூடலூர் நகரப் பகுதியில் தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு தீர்மானக்குழு இணைச் செயலாளர் ஜெயக்குமார் ஏற்பாட்டில் மாநில அளவிலான ஆண்களுக்கான கபடி போட்டி தெற்கு மாவட்டச் செயலாளர் கம்பம் ராமகிருஷ்ணன் எம்.எல்.ஏ. துவக்கி வைத்தார் ஆண்டிபட்டி சட்டமன்ற உறுப்பினர் மகாராஜன் முன்னிலை வகித்தார். மாவட்ட அவைத் தலைவர் மனோகரன் மாநில கொள்கை பரப்பு துணை செயலாளர் பாண்டியன் . கம்பம் ஒன்றிய செயலாளர் தங்கப்பாண்டி . பொதுக்குழு உறுப்பினர் தக்காளி அக்கீம், மாவட்ட துணை செயலாளர் வேப்பம்பட்டி செந்தில் நகரச் செயலாளர் லோகந்துரை ஒன்றிய துணை செயலாளர் மரியதாஸ் . அயலக அணி மாவட்ட அமைப்பாளர் ரவி. மற்றும் கழக முன்னோடிகள் கலந்து கொண்டனர்.

## கரூரில் தூய்மை பணியாளர்களுக்கு காலை உணவு!

கரூர், பிப். 13 -

கரூர் மாவட்டத்தில் தூய்மைப் பணியாளர்களுக்கு காலை உணவுத் திட்டத்தை சட்டமன்ற உறுப்பினர் வி.செந்தில்பாலாஜி துவக்கி வைத்தார்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் மாநகராட்சிகள் நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகளில் தூய்மைப் பணியாளர்களுக்கு காலைஉணவுத் திட்டம் விரிவாக் கத்தை தொடங்கி வைத்ததைத் தொடர்ந்து, கரூர் சட்டமன்ற உறுப்பினர் வி. செந்தில்பாலாஜி கரூர் மாநகராட்சியில் இத்திட்டத்தை தொடங்கி வைத்தார். மாவட்ட ஆட்சியர் மீ.தங்கவேல் தலைமை வகித்தார்.

கரூர் மாநகராட்சியில் பணிபுரியும் 1061 தூய்மைப் பணியாளர்களுக்கு உணவு வழங்கப்பட்டது.



திருவிடந்தையில் நடந்த மாநாட்டுக்கு வருகை தந்த முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு ஆளுயர செங்கோலை அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர் செல்வம் நினைவுபரிசாக வழங்கினார். உடன் கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி., கழக முதன்மைச் செயலாளர் கே.என்.நேரு, கழகத் துணைப் பொதுச் செயலாளர்கள் ஆ.இராசா எம்.பி., அமைச்சர் மு.பெ.சாமிநாதன், கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, அமைச்சர்கள் தா.மோ.அன்பரசன், மா.சுப்பிரமணியன் ஆகியோர் உள்ளனர்.



தி.மு.க.
இளைஞர் அணி

மாவட்ட – மாநகர – மாநில அமைப்பாளர்,
துணை அமைப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டம்

இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அறிவிப்பு

கழக இளைஞர் அணியின் மாவட்ட–மாநகர–மாநில அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டம், வருகிற 14.02.2026 சனிக்கிழமை மாலை 4.00 மணியளவில் மாநில துணைச் செயலாளர்கள் முன்னிலையில் மதுரை ஐடா ஸ்கட்டர் அரங்கத்தில் (Ida Scudder Auditorium), நடைபெற உள்ளது. இக்கூட்டத்தில் மாவட்ட–மாநகர–மாநில அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் அனைவரும் தவறாமல் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

பொருள்: கழக இளைஞர் அணி ஆக்கப் பணிகள்

அன்பகம்
தேனாம்பேட்டை
சென்னை-18
நாள் : 11-02-2026

கலைஞர் 100 1924 - 2023

உதயநிதி ஸ்டாலின்
செயலாளர்,
தி.மு.க. இளைஞர் அணி

### கிராமப்புற பொருளாதாரத்திற்கு முதுகெலும்பாய் இருக்கும்

# நபார்டு வங்கிக்கு வருமான வரி விலக்கு வழங்க வேண்டும்!

## மாநிலங்களவையில் – கேஆர்.என்.இராஜேஸ்குமார் வலியுறுத்தல்!



நாமக்கல், பிப்.13 -

டெல்லியில் மாநிலங்களவை கூட்டத் தொடரில் நாமக்கல் கிழக்கு மாவட்ட கழக செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினரும், நாமக்கல் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி தலைவருமான கே.ஆர்.என். இராஜேஷ்குமார் கலந்து கொண்டு நேரமில்லா நேரத்தில் தேசிய வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி (NABARD) மீது விதிக்கப்பட்டுள்ள அனைத்து வரிகளையும் உடனடியாக நீக்கி, அதன் நிதி சுயாதீனத்தை யும் செயல்திறனையும் வலுப்படுத்த வேண்டும் என்று வலியுறுத்தினார்..

மாநிலங்களவையில் நடைபெற்ற விவாதத்தின் போது பேசிய கே.ஆர். என். இராஜேஷ்குமார்,, “NABARD நாட்டின் ஊரக பொருளாதாரத்தின் முதுகெலும்பாக விளங்கு கிறது. வேளாண் கடன், ஊரக உட்கட்டமைப்பு மேம்பாடு, விவசாயிகள் மற்றும் கிராமப்புற மக்களுக்கு நிலையான வருமான வாய்ப்புகளை உருவாக்குவதில் NABARD மிக முக்கியப் பங்காற்றி வருகிறது. நாட்டின் செல்வத்தின் அடித்தளமாக இருக்கும் ஊரக வளர்ச்சிக்கு ஆதரவளிக்கும் உண்மையான Mother Bird தாய் பறவையாக NABARD திகழ்கிறது”.

NABARD தற்போது செயல்பட்டு வரும் நிதி கட்டமைப்பு, அதன் நோக்கங்களை முழுமையாக நிறைவேற்ற தடையாக இருப்பதாகவும் அவர் சுட்டிக்காட்டினார். NABARD மீது விதிக்கப் படும் வரிகள், ஊரக மக்களின் நலனுக்காக நேரடியாக செலவிடப்பட வேண்டிய வளங்களை குறைத்து வருவதாக கூறிய அவர், “எனவே NABARD மீது விதிக்கப்ப ட்டுள்ள வருவமான வரிகளை அரசு உடனடியாக நீக்க வேண்டும்” என்று வலியுறுத்தினார்.

மேலும், NABARD நிர்வகிக்கும் ★★ஊரக உட்கட்டமைப்பு மேம்பாட்டு நிதி (RIDF)★★க்கான ஒதுக்கீடு கணிசமாக உயர்த்தப்பட வேண்டும் என்றும் அவர் கோரிக்கை வைத்தார். “ஊரக உட்கட்டமைப்பு, பாசன வசதிகள், சந்தை அணுகல் போன்றவற்றிற்கு RIDF மிகவும் அவசியமானதாக இருந்தாலும், தற்போதைய ஒதுக்கீடு போதுமானதாக இல்லை” என்றார்.

RIDF நிதி முழுமையாக வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சிக்கே பயன்படுத்தப்பட வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

MSME, HUDCO, SIDBI போன்ற அமைப்புகள் முக்கியமானவை என்றாலும், அவற்றுக்கான நிதியுதவி NABARD இன் வளங்களை பாதிக்கும் வகை யில் இருக்கக் கூடாது என்றும் அவர் தெரிவித்தார்.



கழகத் தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆணைக்கிணங்க கழக இளைஞரணி செயலாளர், துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் அறிவுறுத்தலின்படி மதுரை வடக்கு மாவட்டம் மதுரை கிழக்கு சட்டமன்ற தொகுதி தி.மு.க. சார்பாக தமிழ்நாடு தலை குனியாது மாபெரும் பொதுக்கூட்டம் மாவட்டச் செயலாளர், வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி தலைமையில் நடைபெற்றதில் கழக தேர்தல் பணி குழுத் தலைவர், வனம் மற்றும் கதர் துறை அமைச்சர் ஆர்.எஸ்.ராஜ கண்ணப்பன் சிறப்புரை ஆற்றினார். மேலும் இக்கூட்டத்தில் கழக நிர்வாகிகள், கழகத்தினர் மற்றும் ஆயிரக்கணக்கான பொதுமக்கள் பெரும் திரளாக பங்கேற்றனர்.